தே.வ.தமிழ்ப்பள்ளி கம்போங் ஜெபொங் லாமா.

ஆண்டு 5

திருக்குறள்

கட்டளை: பொருளுக்கேற்ற திருக்குறளைத் தேர்வு செய்க.

1. ஒரு பிறப்பில் ஒருவர் கற்றுக்கொள்ளும் நல்லறிவு அவருக்குத் தொடர்ந்து வரக்கூடிய ஏழு பிறவிகளுக்கும் பாதுகாப்பாக இருக்கும்.

2 . தீய செயல்கள் தீமையை விளைவிக்கும் தன்மையை உடையனவாக இருக்கின்றன. ஆதலால், நெருப்புக்கு அஞ்சுவதைக் காட்டிலும் தீங்கு செய்வதற்கு அதிகம் அஞ்ச வேண்டும்.

3. அனிச்சப்பூ மோந்தவுடன் வாடிவிடும். அதுபோல முகம் மலராமல் வேறுபட்டு நோக்கியவுடன் விருந்தினர் வாடி நிற்பர்.

4. ஒருவருக்கு அழிவு இல்லாத செல்வம் கல்வியே ஆகும்; மற்றப் பொருள்கள் செல்வமாகக் கருதப்படாது.

LIVEWORKSHEETS

5. வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

6. எந்தப் பொருளைப்பற்றி யார் யார் எப்படி எப்படியெல்லாம் சொன்னாலும் அவற்றைக் கேட்டு அவற்றுள் எது உண்மை என்பதைக் கண்டறியச் செய்வதுதான் அறிவு.

வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். *(291)*

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். *(202)*

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. *(400)*

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. *(90)*

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து. *(398)*

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. *(423)*

ஆக்கம்: ஆசிரியை குமாரி மூ.கஸ்தூரி.

LIVEWORKSHEETS